[illegible]
[illegible]
[illegible]

ஸோராட் கொ4டா3 ரெத்தும் ஸொளபா2ர் அவய் ரஜொ,
நெத்3தி3ம் ஸ்நான் கெர்லி நித்தெ கெரொ புஜொ.
த்யொ காயொ?

[illegible]
[illegible]
[illegible]

பூ4யிம் பிக்கெ பெ3ட்3கி, கெ3ணாத் அப்3பெ3ஸ் தெ2ட்3கி,
பொள்ளொ ஸொக3ன் க3வ்லொ, பி2ல்ரிஸ் ஸொவ்வள் ஸவ்லொ.
த்யொ காயொ?

[illegible]
[illegible]
[illegible]

கு3ண்டு3 கு3ண்டு3 கொப்பல், கொப்பல் பி4த்தர் தொப்பல்,
தொப்பல் சுட்டூர் ருப்போ, தோணும் தய்கின் லுப்3பொ3.
த்யொ காயொ?

[illegible] - ஜெபா3வ்
1. [illegible] - விணாய்
2. [illegible] - தி3வொ
3. [illegible] - ஸூரித்
4. [illegible] - கந்தொ3
5. [illegible] - நளொர்

அழகிய கையெழுத்திற்கு மதிப்பெண் - 10

[illegible] - மாதிரி வினாத்தாள்.

1. தமிழில் அர்த்தம் எழுதுக:- 10

[illegible]

2. ஸவ்ராஷ்ட்ரியில் அர்த்தம் எழுதுக:- 10

பழம், அவள், புத்தகம், தலை, தேங்காய், மாடுகள், பையன், குரங்கு, தங்கை, தண்ணீர்.

3. எதிர்ப்பதம் எழுதுக:- 10

[illegible]

4. ஒன்று முதல் இருபது வரை ஸவ்ராஷ்ட்ரியில் எழுதுக. 10

5. பாடப்புத்தகத்திலுள்ள ஸவ்ராஷ்ட்ர மஹான்களுள் ஒருவரைப் பற்றி 20 வரிகளுக்குள் கட்டுரை எழுதுக. 10

6. தமிழில் மொழி பெயர்க்கவும்:- 20

(10 ஸவ்ராஷ்ட்ர வாக்கியங்கள்)

7. ஸவ்ராஷ்ட்ரியில் மொழி பெயர்க்கவும்:- 20

(10 தமிழ் வாக்கியங்கள்)



ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக இளைஞர் எழுச்சி இயக்கம் நடத்திய இலவச BSRB தேர்வு பயிற்சி வகுப்பின் ஒரு காட்சி

ஸவ்ராஷ்ட்ர மஹான்கள்

1. மேதாவி.தொ.மு. ராமராய்

முகலாயர்களின் கொடுமையைத் தாங்கவியலாது பூர்வீக தேசத்தை விட்டு வெளியேற நேர்ந்த காரணத்தால் ஸவ்ராஷ்ட்ரர்கள் தங்கள் மொழியின் பாலும் இலக்கியங்களின் பாலும் ஈடுபாடு கொள்ள முடியாமல் தவித்தார்கள். ஆயினும் அவ்வப்போது தாங்கள் வசித்த நாடுகளைச் சேர்ந்த பிரதேச மொழிகளில் இலக்கியங்கள் படைத்து வந்திருக்கிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உறுதியான ஒரு திருப்புமுனை அமைந்தது. ஸவ்ராஷ்ட்ர இனத்தின் பெரும்பகுதி தமிழ்நாட்டில் குடியேறி நல்ல வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொண்டது. இக்கால கட்டத்தில் ஸவ்ராஷ்ட்ர குலத்தில் நிறைய மஹான்கள் தோன்றினார்கள். அவர்களுள் தாய்மொழி வளர்ச்சிப் பணியில் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈடுபடுத்திய பேறிஞர் தான் மேதாவி.தொ.மு. ராமராய் அவர்கள்.

திரு. ராமராய் அவர்கள் கி.பி.1852-ம் ஆண்டில் பிறந்தார். இவரது குடும்பப் பெயர் ஜாபாலி கோத்திரத்தைச் சேர்ந்த 'தொப்பெ' என்பதாகும். தந்தையின் பெயர் முனிஸவ்ளி. தாயார் பெயர் மீனாக்ஷி.

சிறு வயதிலிருந்தே கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த ராமராய் 1871ம் ஆண்டில் சென்னை ப்ரீசர்ச் மிஷன் கல்லூரியில் பணியாற்றிய சதுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் லக்ஷ்மணாச்சார்யரின் மாணவராகி சகல வேத உபநிஷத சாஸ்திரங்களிலும் பன்மொழி இலக்கண இலக்கியங்களிலும் விரிவான கல்வி கற்றார். ஆசார்யரின் தாய்மொழிப் பற்றும் இலக்கியங்களும் மாணவராகிய ராமராய்க்கும் தாய்மொழியாகிய ஸவ்ராஷ்ட்ரியின்பால் பற்றும் ஆழ்ந்த ஈடுபாடும் ஏற்படுத்தின. ஆகவே அவர் தாம் வகித்து வந்த ரிஜிஸ்ட்ரார் உத்தியோகத்தையே உதறித் தள்ளி விட்டு மொழி ஆராய்ச்சியில் ஈடுபடலானார். தாய்மொழி ஸவ்ராஷ்ட்ரியைத் தவிரவும் ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, பெங்காலி, ஒரியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ், ஆங்கிலம் முதலிய பதினெட்டிற்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார். 1880-ம் ஆண்டிலிருந்து முழு நேரத்தையும் செல்வத்தையும் ஸவ்ராஷ்ட்ர மொழி இலக்கிய வளர்ச்சிக்கே செலவிட்டார்.

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அதற்கெனத் தனி வரி வடிவம் இன்றியமையாததாகும். இதைத்தமது பன்மொழிப் புலமையால் உணர்ந்திருந்த மேதாவி.ராமராய் அவர்கள் ஸவ்ராஷ்ட்ர மொழிக்கென முழுமையான அளவில் விஞ்ஞான ரீதியாக வரிவடிவம் அமைத்து அச்சு எழுத்துக்களையும் தயாரித்தார். அவற்றைக் கொண்டே நிறைய நூல்களைத் தம் செலவிலேயே பிரசுரித்தார்.

திரு. ராமராய் அவர்கள் தாமே இயற்றி வெளியிட்ட நூல்கள் ஏராளம். அவற்றுள் முதன்மையாக உள்ளவை வருமாறு- 1. ஸவ்ராஷ்ட்ர போதினி. 2. ஸவ்ராஷ்ட்ர பிரைமர். 3. ஸவ்ராஷ்ட்ர முதல் பாட புஸ்தகம். 4. ஸவ்ராஷ்ட்ர இரண்டாம் பாட புஸ்தகம். 5. ஸவ்ராஷ்ட்ர நீதி ஸம்பு. 6. ஸவ்ராஷ்ட்ர வியாகரணம். 7. ஸவ்ராஷ்ட்ர நந்தி நிகண்டு மற்றும் பல. இவை தவிர தமிழ்,

தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், ஸவ்ராஷ்ட்ரம் ஆகிய நான்கு மொழி சொற்தொகுப்பாக 'சதுர்பாஷா வல்லரி' எனும் நூலையும் இயற்றி வெளியிட்டுள்ளார்.

திரு. ராமராய் அவர்கள் இயற்றிய ஸவ்ராஷ்ட்ர நீதிஸம்பு எனும் நீதி நூலிலுள்ள கருத்தாழத்தைக் கண்டு இன்புற்ற ஆங்கில பேராசிரியர் எச்.என். ராண்டேல் என்பவர் அந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து லண்டனிலுள்ள இந்திய மொழி இலக்கியக் கருவூலத்தில் சேர்த்து வைத்துள்ளார். திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகளும் தமது 'திருப்புகழமிர்தம்' என்னும் நூலில் ஸவ்ராஷ்ட்ர நீதி ஸம்புவைப் பிரசுரித்துத் தமிழ் மக்களிடையே பரப்பியுள்ளார்.

திரு. ராமராய் அவர்கள் சென்னைவாசி அவர் சில காலம் மதுரையில் தங்கியிருந்தார். அச்சமயம் ஸ்ரீமந்நடனகோபால நாயகி ஸ்வாமியைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. உடனே தாய் மொழிப்பற்றை ஊட்டும் பாடல்களை இயற்றும் படி நாயகி ஸ்வாமிகளிடம் திரு. ராமராய் வேண்டிக்கொண்டார். நாயகி ஸ்வாமிகளும் ''பா4ஷாப4க்தி நீ:ஸ்தெநொ பா4த் நீ:ஸ்தெ பொ4ந்நொ'' போன்ற பாடல்களைப் பாடி ஸவ்ராஷ்ட்ர மொழி வரலாற்றில் எழுச்சியும் வேகமும் உண்டாக்கினார்.

மேதாவி. ராமராய் அவர்களது தொலைநோக்கு அற்புதமானது. எதிர்காலம் கணிப்பொறி மயமாகும் என்பதை அவர் நிச்சயமாக அறிந்திருந்தார். அதனால் தான் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுத்துப் பயன்படும் வகையில் ஸவ்ராஷ்ட்ர மொழிக்கெனச் சீர்திருத்திய தனி வரி வடிவத்தை உருவாக்கித் தந்திருக்கிறார். இன்று கணிப்பொறியில் புகுந்து அந்த வரிவடிவம் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது. ஸவ்ராஷ்ட்ரர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் வெளிநாடுகளிலும் ஸவ்ராஷ்ட்ர மொழியினை அதற்குரிய வரி வடிவத்தில் படிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கணிப்பொறியில் தனிப்பக்கமும் இன்டர்நெட் இணைப்பும் ஸவ்ராஷ்ட்ர மொழியின் உலகளாவிய வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன.

தற்சமயம் மதுரை ஸ்ரேஷ்ட ஸவ்ராஷ்ட்ர ஸாஹித்ய ஸபா மிக வேகமாகவும் அதிகமாகவும் ஸவ்ராஷ்ட்ர நூல்களை வெளியிடும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

ஸவ்ராஷ்ட்ர கல்விக் கழகங்களும் ஸவ்ராஷ்ட்ர ஸமூகத்தினர் நிர்வகிக்கும் நர்ஸரி, ஆரம்ப மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஸவ்ராஷ்ட்ர மொழியைப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். வெகு விரைவில் பல்கலைக் கழகங்களில் ஸவ்ராஷ்ட்ர மொழிக்கு ஒரு 'இருப்பிடம்' ஏற்படுத்த வழி செய்ய வேண்டும். அதற்கு உதவும் வகையில் கதை, கவிதை, நாடகம், நாவல் ஆகிய எல்லாவகை நூல்களும் சரமழையெனக் கொட்ட வேண்டும். அதற்கு இளைஞர்கள் உழைக்க வேண்டும்.

ஸவ்ராஷ்ட்ர மஹான்கள்

2. ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள்

மதுரையின் ஜோதி என்றும் ஸவ்ராஷ்ட்ர ஆழ்வார் என்றும் போற்றப்படுபவர் ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள். இவரது இயற்பெயர் ராமபத்திரன் என்பதாகும். நாகலிங்க அடிகள் எனும் திருப்பெயர் கொண்ட குருவிடம் 'சதானந்த அடிகள்' என்ற பட்டப்பெயர் பெற்றவர் நாயகி ஸ்வாமிகள். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதில் திட நம்பிக்கை கொண்டு இருக்கையிலும் நடக்கையிலும் படுக்கையிலும் உண்கையிலும் உடுக்கையிலும் கண்ணனையே தியானித்து நாயகி பாவனையில் வாழ்ந்தவர்.

ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் கி.பி.1843ம் ஆண்டில் அவதரித்தார். இவரது தந்தையின் பெயர் ரெங்கார்யர். தாயார் லக்ஷ்மி. குடும்பப் பெயர் 'கொப்பான்' என்ற புனைபெயரில் வழங்கும் சின்னகொண்டா என்பதாகும். தமது 71வது வயதில் 1913ம் ஆண்டில் வைகுண்ட ஏகாதசியன்று மஹாஸமாதி அடைந்தார் இவர்.

நடனகோபால நாயகி ஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாறு படிக்கப் பரவசம் தருவதாகும்.

ஸ்வாமிகள் நினைத்ததை உடனே பாடும் வரகவியாக விளங்கினார். ஒரு நாள் கடை வீதியில் இனிப்புப் பலகாரக் கடையைக் கண்டதும்,

''மிட்டாய் மிட்டாய், ராம நாம மிட்டாய்,
எட்டாள் பலம் தரும் பட்டாபிராம மிட்டாய்''
என்று பாடி ஆடத் தொடங்கி விட்டார்.

இதே போல் ஒரு சமயம் சிதம்பரம் சென்று பெருமாள் சந்நிதிக்குச் சென்றதும்,

''வள்ளல் வாஸுதேவன் நாமத்
தெள்ளமிர்தம் உள்ளே கொண்டால்
கொள்ளைக்காரன் வரமாட்டான் - வந்தாலும்
கொள்ளைக்கிடமின்றிப் போவான்''
என்ற கீர்த்தனையைப் பாடி உடனிருந்தவர்களைப் பரவசப்படுத்தினார்.

இவை ஓரிரு உதாரணங்கள் மட்டும் தான். நாயகி ஸ்வாமிகளின் கீரத்தனைகள் பக்திச் சுவை மிக்கவை. ஆன்மீக ஆனந்தம் தருபவை, சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையையும் தாய்மொழிப் பற்றையும் ஊட்டுபவை.

''பா4ஷா ப4க்தி நீ:ஸ்தெநொ
பா4த் நீ:ஸ்தெ பொ4ந்நொ''
என்று கூறி ஸவ்ராஷ்ட்ர மக்களுக்கு எழுச்சியூட்டினார் ஸ்வாமிகள்.

அதே சமயத்தில்,
''ஹுடிநிம் பி3ஸிநிம் சல்நிம் ஹோங்கு3ம்
நடனகோ3பால த்4யான் ஸொண்ணொகொ மொந்நு''
என்று தெய்வ பக்திக்கும் முக்யத்வம் கொடுத்தார். இவரது பாடல்கள் பெரும்பாலும் மனத்தை விளித்துப் பாடப் பெற்றவையாய் விளங்குகின்றன. பிறவிப் பிணியினின்று விடுபடுவதற்குக் குருவின் வழிகாட்டுதல் இன்றியமையாதது என்பது நாயகி ஸ்வாமிகளின் திட நம்பிக்கையாகும்.

ஸ்வாமிகள் நைஷ்டிக பிரம்மச்சாரியாக வாழ்ந்தார். இவர் வருடந்தோறும் வைகுண்ட துவாதசியன்று ஸ்ரீரங்கத்தில் ஸமாராதனை நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதற்குத் தேவையான பொருட்களை மதுரையிலிருந்து எடுத்துச் செல்வார். ஒரு வருடம் வசூலான பணத்தையும் சேகரித்த பொருட்களையும் எடுத்துக் கொண்டு ரயிலில் பயணம் செய்தார். திருடன் ஒருவன் இவரிடமிருந்த பணத்தைத் திருடி விட்டான்.

பணத்தைக் காணவில்லையென்று தெரிந்ததும் நாயகி ஸ்வாமிகள், “ஆஹா! அங்கே நடக்க வேண்டிய அறப்பணியை எம்பெருமான் நமக்குச் சிரமம் தராமல் இங்கேயே நடத்திக் கொடுத்து விட்டார்” என்று ஆனந்தக் கூத்தாடத் தொடங்கினார். உடனிருந்த எல்லாரும் மனமுடைந்து வருந்தினர். ஆனால் விஷயம் வெளியில் தெரிந்ததும் மக்கள் பணத்தைக் கொண்டு வந்து குவித்தனர். முன்னை விட மிக விமரிசையாக அவ்வருட ஸமாராதனை விருந்து நடைபெற்றது.

நடனகோபால நாயகி ஸ்வாமிகள் மதுரையில் பிறந்தாலும் பெற்றோரின் கைநெசவுத் தொழில் காரணமாய் அவரது இளமைப் பருவம் கும்பகோணத்தில் கழிந்தது. திருமணம் செய்து கொள்ளும்படி பெற்றோர் வற்புறுத்தவே ஸ்வாமிகள் மறுத்து விட்டு மதுரையில் வந்து திருப்பரங்குன்றத்தின் பின்புறமுள்ள குகையில் ஏகாந்தவாஸத் தவமியற்றினார். பின்னர் தலயாத்திரை துவங்கினார். இராமேஸ்வரம் செல்லும் வழியில் பரமக்குடியில் நாகலிங்க அடிகளின், சீடராகி யோகாப்பியாசத்தில் தரையிலிருந்து மேலெழும்பிச் செல்லும் அளவிற்குத் தேர்ச்சி பெற்றார். குருவிடமிருந்து ஸ்தானந்த சித்தர் என்னும் விருதையும் பெற்றார்.

பின்னர் தென்திசை யாத்திரை செய்த போது நாயகி ஸ்வாமிகளின் வாழ்க்கையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. ஆழ்வார் திருநகரியில் வடபத்ராச்சாரியார் எனும் மஹானின் தரிசனமும் உபதேசமும் ஸ்வாமிகள் வைணவ நெறியில் ஈடுபட வழி செய்தது. அதுமுதல் கோவிந்தனாகிய நடகோபாலனுக்கு நாயகி ஆனார்.

நடனகோபால நாயகி ஸ்வாமிகள் உஞ்ச விருத்தியின் மூலம் கிடைத்த பொருட்களைக் கொண்டு அன்றாடம் வயிற்றுப் பசியை ஆற்றிக் கொண்டார். அவ்வப்போது இயற்றும் கீர்த்தனங்களை பாடியபடி ஆடிக் கொண்டே ஸ்வாமிகள் உஞ்ச விருத்தி செய்தார். இதன் மூலம் மக்களுக்கு உண்மையான வாழ்க்கைத் தத்துவத்தைப் போதித்தார்.

நாயகி ஸ்வாமிகளின் விருப்பப்படியே மதுரை அழகர்கோவில் சாலையிலுள்ள காதக்கிணறு என்னுமிடத்தில் அவரது திருச்சமாதி அமைக்கப்பட்டுள்ளது. மாரியம்மன் தெப்பக்குளத்தின் மேற்குக் கரையில் பக்தகோடிகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ கீதா நடனகோபால நாயகி மந்திர் மூலம் நாயகி ஸ்வாமிகளின் கீர்த்தனைகள் நாடெங்கிலும் பரவிப் பாடப்படுகின்றன. தாய்மொழிப் பற்றையும் ஸமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் எளிமையான பாடல்களின் மூலம் ஸவ்ராஷ்ட்ர மக்களுக்கு ஊட்டி எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் உண்டாக்கிய மஹான் ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள்.

ஸவ்ராஷ்ட்ர மஹான்கள்

3. அழகரார்யான்

பாரத தேசத்தில் அநேக மஹான்கள் தோன்றி ஹிந்து தர்ம கலாசாரத்தைக் காலாகாலத்தில் விருத்தி செய்து நிலை நிறுத்தி வந்துள்ளார்கள். ஸவ்ராஷ்ட்ர ஸமூகத்திலும் மொழி, கலை, கலாசாரம் முதலானவற்றில் முன்னேற்றமடைந்து மக்கள் கடைத்தேற வழி காட்ட பெரும் மஹான்கள் அவதரித்துள்ளனர்.

வாழ்க்கை என்பது படகுப் பயணம் போன்றது என்பர் ஆன்றோர். படகை நதியின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லாமல் இனிமையான ஸங்கீத ஞானத்தால் மனதை ஒருமுகப்படுத்திப் பேரானந்தப் பேரின்ப நிலையை அடைந்த மஹான்களுள் ஸேலம் மஹாகவி அழகரார்யர் முதன்மையானவர்.

ஸ்ரீ அழகரார்யரின் இயற்பெயர் ஸுந்தர்கீஷ்டு என்பதாகும். தந்தையின் பெயர் நரஸிம்மார்யர். தாயார் பெயர் ஸ்வர்ண லக்ஷ்மி. இவர்களது குடும்பப் பெயர் புட்டா என்பதாகும்.

ஸ்ரீ அழகரார்யர் எட்டு மொழிகளில் புலமை பெற்றவராய் உபந்யாஸம் செய்யும் வல்லமை உடையவராய்த் திகழ்ந்தார். புரோஹிதம், ஜோதிடம், ஸங்கீதம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். வரகவி ஸ்ரீ வேங்கடஸூரி ஸ்வாமிகளின் பிரதம சீடராக இருந்தார் என்பதே இவரது பெருமையை உணர்த்தும். இவர் கி.பி. 1832ம் ஆண்டு புரட்டாசி மாதம் விஜயதசமியன்று பிறந்தவர் ஆவார். பலப்பல மஹான்கள் புரட்டாசி மாதத்தில் தான் மண்ணுலகில் உதித்திருக்கிறார்கள் என்பது நினைவு கூறத் தக்கது. மணவாள மஹாமுனிகள், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள், வரகவி வேங்கடஸூரி , நந்தனார், கண்ணப்ப நாயனார், சேக்கிழார் என்று மஹான்களின் திருப்பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஸ்ரீ அழகரார்யர் தமது பன்னிரண்டாவது வயதிலேயே ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்மர் பேரில் யமுனா கல்யாணி ராகத்தில் கீர்த்தனை இயற்றிப் பாடினார். பத்தொன்பது வயதிலேயே கல்வியிற் சிறந்த மாமேதைகளுடன் பழகி அவர்களைக் கொண்டு ஸங்கீதக் கச்சேரி மற்றும் உபந்யாசங்கள் நிகழ்த்தினார். வேங்கடஸூரி ஸ்வாமிகளின் ஸவ்ராஷ்ட்ர ஸங்கீத ராமாயண உபந்யாசத்தால் கவரப்பட்டுச் சீடராகிப் பிரதம சீடராகவும் உயர்ந்தார்.

ஸ்ரீ அழதரார்யர் 'ஆஸவ்ச நிர்ணயம்' மற்றும் 'விஷ்ணு புராணம்' என்ற இரு நூல்களை இயற்றி வெளியிட்டார். இதன் மூலம் அவரது மகிமையை அறிந்த வெளியூர்வாசிகளும் அவரை உபந்யாஸம் செய்வித்தார்கள். அழகரார்யர் செல்லுமிடங்களிலெல்லாம் நாற்பது ஸம்ஸ்காரங்களை விளக்கிப் பிரசாரம் செய்து வைதிக தர்மத்தை வளர்த்தார். மேலும் இவர், 'ஸவ்ராஷ்ட்ர வியாகரணம், ந்ருஸிம்ஹ ஸதகம், ஸ்ருங்கார வர்ண கீதங்கள், லாவணிகள், பஜனோற்சவ கீர்த்தனைகள் ஆகியவற்றையும் இயற்றினார். இவர் இயற்றிய 'பஞ்சல் சரித்ரு' என்கிற ஸவ்ராஷ்ட்ர மொழி நவ்கா காவியம் இவரது புலமையைப் பறைசாற்றும் ஒப்புயர்வற்ற நூலாகும்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி தேவஸ்தானத்தில் ஸூரி ஸ்வாமிகள் பெருமைமிக்க நவ்கா காவியத்தை உபந்யாஸம் செய்த போது அழகரார்யர் ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணியால் எழுதி வைத்தார். குறிப்பால் உணர்ந்த ஸூரி ஸ்வாமிகள், 'உமது கவித் திறமையால் நவ்கா காவியத்தைத் தாய்மொழியாகிய

ஸவ்ராஷ்ட்ரத்தில் இயற்றி ஸமூகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதையே குருகட்டளையாக ஏற்ற அழகரார்யர் மூல நூலைப் போன்றே உபமான-உபமேய முதலிய காவிய இலக்கணங்களுடன் 'பஞ்சல் சரித்ரு' வை அழகிய ஸவ்ராஷ்ட்ர மொழியில் இயற்றினார். அதே ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தேவஸ்தானத்தில் பஞ்சல் சரித்ரு காவிய அரங்கேற்றம் நடைபெற்ற போது அழகரார்யரின் கவித்திறமை யாவருக்கும் தெரிந்தது. அவருக்கு 'ஸங்கீத ஸாஹித்ய ப்ரவீண' என்ற சிறப்பு விருது வழங்கிக் கவுரவித்தார் ஸூரி ஸ்வாமிகள்.

ஏதோ காரணத்தால் தென்கலை சம்பிரதாயத்திற்கு மாறியிருந்த ஸூரி ஸ்வாமிகளைத் தக்க சமயம் பார்த்து வேண்டுகோள் விடுத்த அழகரார்யர் மீண்டும் வடகலை சம்பிரதாயத்திற்கு மாற்றினாரென்றால் அவரது பெருமையை அளவிட முடியுமோ?

1873ம் ஆண்டில் மகாமகம் சமயத்தில் ஒரு வாரகாலம் அழகரார்யர் உபந்யாஸம் செய்ததைப் பற்றி இன்றைக்கும் குடந்தை மக்கள் பேரானந்தத்துடன் பேசிக் கொள்கிறார்கள். 1885லும் மகாமக விழாவின் போது அழகரார்யரின் கதாகாலட்சேபம் நடைபெற்றது.

1898ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸேலத்திற்கு வருகை புரிந்த ஆங்கிலேய கவர்னர் ஸர்.ஆர்தர் ஹாவ்லாக் என்பவருக்கு ஸவ்ராஷ்ட்ர மொழியில் வரவேற்புப் பத்திம் வாசித்தளித்தார்.

இதே வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் மதுரையில் நடைபெற்ற ஸவ்ராஷ்ட்ர பிராமண இரண்டாவது மஹாநாட்டைத் தமது தலைமையில் மிகப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டிய அழகரார்யர் அடுத்த 1899ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஸேலத்தில் நடந்த மூன்றாவது மஹாநாட்டில் 'ஸவ்ராஷ்ட்ர மித்திரன்' எனும் பத்திரிகையைத் துவக்கினார். மேலும் ஸேலத்தில் ஸவ்ராஷ்ட்ரருக்கெனப் பள்ளிக்கூடமும் உண்டாக்கினார். அடுத்து 1900 ல் உறையூரில் நடைபெற்ற நான்காவது மஹாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய அழகரார்யர், 'நம் ஸமூகக் குழந்தைகள் யாவருக்கும் ஸவ்ராஷ்ட்ர மொழியைக் கற்றுத் தரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு ஸவ்ராஷ்ட்ர மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, ஸங்கீதம் முதலிய ஸகல துறைகளிலும் சிறந்து உயர்ந்து விளங்கிய மஹான் அழகரார்யர் 21.7.1906 அன்று பூதவுடலை நீத்து அனைத்து ஸவ்ராஷ்ட்ர மக்களின் நெஞ்சங்களிலும் நீங்காது இருந்து வருகிறார்.

ஸவ்ராஷ்ட்ர மஹான்கள்

4. ஸ்ரீமத் வேங்கடரமண பாகவதர்

ஸவ்ராஷ்ட்ர மஹான்களுள் ஸம்ஸ்க்ருதப் புலமையும் ஸங்கீத ஸாத்ரத்தில் மிகுந்த தேர்ச்சியும் உடையவராய் விளங்கியவர் ஸ்ரீமத் வேங்கடரமண பாகவதர் ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் வாழ்க்கை மற்றும் கீர்த்தனைகளை ஆராய்ச்சி செய்யும் ஸங்கீத விற்பன்னர்களும் அறிஞர் பெருமக்களும் வேங்கடரமண பாகவதரின் முக்யத்வம் அறிவர்.

ஸ்ரீ தியாகப்பிரம்மம் தமது இறுதிக் காலத்தில் தமது படைப்பிலக்கிய ஏட்டுச் சுவடிகள் மற்றும் உயிரினும் மேலாய்ப் பாதுகாத்து வைத்திருந்த ஸ்ரீ ஸீதாராம லக்ஷ்மண திருவுருவத்தையும் பிரதம சீடராகிய வேங்கடரமணரிடம் ஒப்படைத்தார்.

வேங்கடரணரின் பிறப்பிடம் அய்யம்பேட்டை ஆகும். ஆயினும் தியாகப் பிரும்மத்தைத் தமது குருவாக ஏற்றுக் கொண்ட அவர் கால்நடையாகவே தினமும் திருவையாறுக்குச் சென்று குருவின் வீட்டிற்கு வெளியே நின்று ஸங்கீதத்தை அநுபவித்து வந்தார். இதையறிந்த தியாகப்பிரம்மம் அவரைத்தமது பிரதம சீடராக ஏற்றுக் கொண்டார்.

ஸத்குரு தியாகப்பிரம்மத்தையும் வேங்கடரமண பாகவதரையும் பிணைத்திருந்த குரு ஸிஷ்ய உறவு மகத்துவம் வாய்ந்தது. இருவருக்குமிடையில் நடைபெற்ற சுவையான அற்புதமான வரலாற்று நிகழ்ச்சிகள் சிலரது பொறாமை காரணமாக எழுத்துருப் பெறாதவாறு மறைக்கப்பட்டுள்ளன.

வேங்கடரமணர் ஸவ்ராஷ்ட்ர மொழியில் நிறையப் பக்திரஸக் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். தமது தெலுங்குக் கிருதிகள் அனைத்திலும் இறுதியில் 'தியாகராஜ' என்ற முத்திரையிட்டுக் குருகாணிக்கை செலுத்தியுள்ளார். என்னே குருபக்தி!

கி.பி.1943ல் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள் பயன்படுத்திய பாதுகை, பாராயணம் செய்த தெலுங்கு பாகவதம், கையெழுத்து ஏட்டுச் சுவடிகள், ஸ்ரீவேங்கடரமணபாகவதரின் பாதுகைகள், பூஜா பாத்திரங்கள், அவர் இயற்றிய கீர்த்தனைகள், புதிய வர்ணங்கள், ஸ்வர ஜதிகள் முதலியவை அடங்கிய அற்புத பொக்கிஷமான ஏட்டுச் சுவடிகள் மதுரை ஸவ்ராஷ்ட்ர ஸபையைச் சேர்ந்த வேங்கடரமண மந்திரத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை சிதைந்து அழிந்து போய் விடுவதற்கு முன் நூல்களாக அச்சிட்டுப் பிரசுரிக்க வேண்டியது ஸவ்ராஷ்ட்ரர்களின் கடமையாகும்.

ஸ்ரீ வேங்கடரமணரின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் பல. இவரது குலத்தொழில் கைத்தறி நெசவு ஆகும். ஒரு சமயம் இவர் தறியிலமர்ந்து நெய்து கொண்டிருக்கும் பொழுது தன்னை மறந்து கண்ணனின் தாளிணையைப் போற்றிப் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது கைதவறிக் கீழே விழுந்த தறிநாடா(நெளி)வைக் கண்ணனே சிறுவன் உருவில் வந்து எடுத்துக் கொடுத்தான்!

ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் புதல்வியின் திருமண வைபவத்தில்

எத்தனையோ விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் வந்தன. ஆனால் பிரதம சீடரான வேங்கடரமணர் கொண்டு வந்து தந்த ஸ்ரீஸீதாராம லக்ஷ்மணரின் திருவுருவப் படத்தைத் தான் தியாகப் பிரம்மம் பெரிதாக மதித்தார்! அப்போது வேங்கடரமணர் பாடிய 'நனு பாலிம்ப' கீர்த்தனை ஸத்குருவிற்குப் பெரும் அகமகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஸ்ரீ வேங்கடரமணர் புன்னாகவராளிக் கீர்த்தனங்களை மிக விருப்பத்துடனும் ஈடுபாட்டுடனும் பாடுவார். புன்னாகவராளி என்பது நாகங்களை மயக்கி ஈர்க்கும் இனிய ராகம் ஆகும். ஒரு முறை வேங்கடரமணர் தமது இஷ்ட தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்துப் புன்னாகவராளி இசையில் ஆனந்தமாக ரசித்துப் பாடத் தொடங்கினார் அப்போது பெரியதொரு நாகம், அங்கே வந்து படமெடுத்து ஆடியது. வேங்கடரமணர் தன்னையும் சுற்றுப்புறத்தையும் மறந்து பாடிக் கொண்டிருந்தார். ஆனால் அங்கிருந்தவர்கள் அச்சத்தால் கூச்சலிட்டனர். சுய நினைவிற்குத் திரும்பிய வேங்கடரமணர் வேறொரு பாட்டால் நாகத்தைத் திரும்பிச் செல்ல வைத்தார்!

ஸ்ரீ வேங்கடரமணர் கி.பி. 1781ல் பிறந்து 1889 வரை நூற்றியெட்டு ஆண்டுகள் வாழ்ந்தார். தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டையில் இவரது ஜெயந்திவிழா ஸவ்ராஷ்ட்ர மக்களால் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மற்றெல்லா ஊர்களிலும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. வேங்கடரமணரின் வாழ்க்கை வரலாற்றை அறிஞர் பெருமக்கள் நன்கு ஆராய்ந்து மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகளை முழு வடிவில் வெளிக் கொணர வேண்டும். ஸவ்ராஷ்ட்ர மக்கள் யாவரும் தமது இல்லத்தில் வேங்கடரமணரின் திருவுருவப் படத்தை வைத்துப் பூஜிக்க வேண்டும். அவர் இயற்றிய ஸவ்ராஷ்ட்ர மொழிக் கீர்த்தனைகளைக் கச்சேரிகளிலும் பஜனைகளிலும் பாடிப் பரப்பவேண்டும். முக்கியமாக ஸங்கீத விற்பன்னர்களுக்கு இது முதன்மையான கடமையாகும்.

ஸவ்ராஷ்ட்ர மஹான்கள்

5. ஸ்ரீ வேங்கட ஸூரி ஸ்வாமிகள்

நமது இந்திய மொழிகளின் இலக்கியங்கள் யாவற்றிற்கும் ஆதாரமாக அமைந்திருப்பது பழம்பெரும் இதிஹாசப் புராணங்களே. எல்லா மொழிகளிலும் இராமாயண, மஹாபாரதக் கதைகள் மொழி பெயர்க்கப்பட்டு மக்களின் பக்தியுணர்விற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பயன்பட்டு வந்திருக்கின்றன. கர்நாடக ஸங்கீதத்திலேயே இராமாயணம் முழுதும் ஸவ்ராஷ்ட்ர மொழியில் இயற்றிக் கவிச்சக்கரவர்த்தியாகவே விளங்கியவர் ஸ்ரீவேங்கடஸூரி ஸ்வாமிகள். இவரது காலம் கி.பி.1817 முதல் 1889 வரை ஆகும். இம்மஹான் ஸ்ரீவேங்கடரமண பாகவதரின் பிரதம சீடர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேங்கடஸூரி ஸ்வாமிகள் உதித்த இடம் அய்யம் பேட்டைக்கடுத்த இராமச்சந்திரபுரம் ஆகும். வைதிகத்தைத் தொழிலாகக் கொண்ட ஸ்ரீ நாராயண ஸர்மாவிற்கும் ரெங்கநாயகி தேவிக்கும் நற்புதல்வராய் ஸவ்ராஷ்ட்ர குல நன்மணியெனத் தோன்றிய இவர் சிறு வயதில் பக்த பிரகலாதன் நாடகத்தைப் பார்த்துப் பிரகலாதனின் உண்மை பக்தியும் திருமாலின் உக்கிர அவதாரமான நரஸிம்மமூர்த்தியின் மகிமையும் உணர்ந்தார். நரஸிம்மரின் உபாஸகராகி திருவருள் பெற்றுக்கவி பாடும் திறம் பெற்றார். தாய்மொழி ஸவ்ராஷ்ட்ரத்திலும் வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய பிறமொழிகளிலும் குலத்தொழிலான வைதிகத்திலும் நிகரற்ற புலமை பெற்றார். 'தஞ்சாவூர் அய்யான்' என்பது இவரது பட்டப் பெயராயிற்று.

மன்னர் சிவாஜிக்கு வேங்கடஸூரி ஸ்வாமிகளின் கல்வி, ஒழுக்கம், புலமை ஆகிய குணாதிசயங்களைப் பற்றிய செய்தி கிடைத்தது. தமது புதல்வியின் திருமணத்திற்கு அழைப்பு அனுப்பினார். ஸ்வாமிகளும் சென்று ஸவ்ராஷ்ட்ர மொழியில் 'மங்களாஷ்டகம்' பாடி ஆசி கூறினார். இவரது புலமையை மெச்சிய மன்னர் நிறையப் பரிசுகள் அளித்துக் கவுரவித்தார்.

பின்னொரு சமயம் மன்னரின் ஆஸ்தானப் புலவரை தர்க்க வாதத்தில் வென்று 'வேங்கடஸூரி' என்ற பட்டத்தைப் பெற்றார். அவைக்களப் புலவர் பதவியும் பெற்று ஸரஸ்வதி மஹாலில் ஆராய்ச்சி உறுப்பினராகிப் பெறுமையுடன் விளங்கினார். சிவாஜி மன்னர் வீரகண்டாமணி ஹாரத்தையும் பரிசாக அளித்தார். ஸூரி என்ற மராத்தியச் சொல்லுக்கு வெற்றி பெற்றவர் என்று பொருள்.

பிற்காலத்தில் மதுரைக்கு வந்து திரௌபதியம்மன் கோயிலில் தங்கி ஸங்கீத ராமாயணம் பாடியருளினார். இக்காவியம் அருணாசலக் கவிராயரின் 'இராம நாடகம்' எனும் நூலில் அமைந்துள்ள வர்ண மெட்டுகளில் அமைந்ததாகும். இதில் 584 ஸ்லோகங்களும் 297 கீர்த்தனைகளும் உள்ளன. டாக்டர் ராண்டேல் என்னும் ஆங்கிலேய அறிஞர் ''அச்சிடப்பட்ட இலக்கியங்களில் மிகமிக ஒப்புயர்வற்றது'' என்று ஸவ்ராஷ்ட்ர ஸங்கீத ராமாயணத்தைப் புகழ்ந்துள்ளார். ஸ்வாமிகளின் கையெழுத்துப் பிரதிகளை அவரது சீடர்களும் சந்ததியாரும் பாதுகாத்து வருகிறார்கள்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் தெலுங்கு நவ்கா ஸரிதத்தை அழகிய ஸம்ஸ்க்ருதத்தில் ஆக்கித் தந்துள்ளார் வேங்கடஸூரி. இவர் கதாகாலட்சேபத்திலும மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேங்கடஸூரி ஸ்வாமிகள் தஞ்சையில் ஆஞ்சநேயர் கோவிலில் அர்ச்சகராக இருந்தார். ஒரு நாள் இவரைத் தேள் கொட்டி விட்டது. வலி பொறுக்காமல் சினத்துடன் இவர் பாடிய போது அந்தத் தேள் எரிந்து போயிற்று. இன்னொரு சமயம் காஸியில் தங்கியிருந்த போது ஆஞ்சநேய ஸ்தோத்திரம் மற்றும் ஆஞ்சநேய பராக்கிரமம் பாடிக் கொண்டிருந்த போது ஏராளமான வானரங்கள் அங்கே தோன்றி ஆனந்தக் கூத்தாடிக் கவியரசருக்குப் பலவகைக் கனிகளைத் தந்து விட்டு மறைந்தன.

வேங்கடஸூரி ஸ்வாமிகள் இரண்டாவது முறையாக காஸி யாத்திரை மேற்கொண்டு நேபாளம் சென்று திரும்புகையில் யமுனை நதிக்கரையில் இறைவனுடன் கலந்தார். அப்போது அவருக்கு 72 வயது.



ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக இளைஞர் எழுச்சி இயக்கம் நடத்திய ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகளின் 157வது குரு ஜெயந்தி விழா வாகனப் பேரணியின் ஒரு பகுதி

ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக இளைஞர் எழுச்சி இயக்கம்

நடத்திவரும் நற்பணிகளில் சில:-

(1) ஆண்டு தோறும் ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் திருநக்ஷத்திரத்தன்று மார்கழி - மிருகசீரிஷம் ஆச்சார்ய திருவாராதனம் (குரு பூஜை) மற்றும் அந்நிகழ்ச்சியை முன்னிட்டு மாநிலம் தழுவிய மாபெரும் ஆன்மீக எழுச்சி வாகனப் பேரணி நடத்துகிறது.

(2) கோடைகால விடுமுறை காலத்தில் சிறுவர் சிறுமியர்களுக்கு ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் கீர்த்தனைகள், ஸ்லோகங்கள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

(3) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு உதவிகரமாக BSRB, SSC, போன்ற தேர்வுக்கு பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

(4) ஒரிஸா மாநிலம் இயற்கை சீரழிவால் பாதிக்கப்பட்டபோது 4டன் துணிமணிகளை மதுரை மக்களிடையே திரட்டி நிவாரண பணியில் ஈடுபட்டது.

(5) ஸ்ரீமந் நடன கோபாலநாயகி ஸ்வாமிகள் ப்ருந்தாவன திருக்கோவில், ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோவில் மஹாசம்ப்ரோக்ஷணங்களில் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் சேவை செய்தது.

(6) ஸௌராஷ்ட்ர மொழி வகுப்புகள் நடத்துகிறது.

(7) ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் கைங்கர்யம் செய்பவர்களையும், சமுதாயப்பணி ஆற்றியவர்களையும் பாராட்டி கௌரவிக்கிறது.

(8) தமிழ்நாட்டில் ஸௌராஷ்ட்ரர் முழுவரலாறு எனும் நூலை மதுரையில் அறிமுகப்படுத்தியது.


(9) ஸ்ரீமந் நடனகோ பால நாயகி ஸ்வாமிகளின் பக்தர்களை ஒன்று திரட்டும் வண்ணம் மாநிலத்தில் எல்லா பகுதிகளிலும் கிளைகளை அமைத்து வருகிறது.

(10) பிரதி ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை காலையில் தெப்பக்குளத்திலுள்ள நாயகி மந்திரில் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் நடத்தி வருகிறது.

(11) ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகளின் ஆன்மீக, பக்தி பாடல் அடங்கிய ஆடியோ கேசட் வெளியிட்டது.

(12) ஆன்மீக பக்தர்களுக்காக தண்ணீர் பந்தல், ஏழை எளிய மாணவ மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்களை வழங்கி வருகிறது.

எல்லா புகழும் நாயகி ஸ்வாமிக்கே.



ஸ்ரீ தைத்ய சூதன்

(பூர்ண அலங்காரத்துடன்)

ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக இளைஞர் எழுச்சி இயக்கம்

நடத்திவரும் நற்பணிகளில் சில:-

(1) ஆண்டு தோறும் ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் திருநக்ஷத்திரத்தன்று மார்கழி - மிருகசீரிஷம் ஆச்சார்ய திருவாராதனம் (குரு பூஜை) மற்றும் அந்நிகழ்ச்சியை முன்னிட்டு மாநிலம் தழுவிய மாபெரும் ஆன்மீக எழுச்சி வாகனப் பேரணி நடத்துகிறது.

(2) கோடைகால விடுமுறை காலத்தில் சிறுவர் சிறுமியர்களுக்கு ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் கீர்த்தனைகள், ஸ்லோகங்கள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

(3) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு உதவிகரமாக BSRB, SSC, போன்ற தேர்வுக்கு பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

(4) ஒரிஸா மாநிலம் இயற்கை சீரழிவால் பாதிக்கப்பட்டபோது 4டன் துணிமணிகளை மதுரை மக்களிடையே திரட்டி நிவாரண பணியில் ஈடுபட்டது.

(5) ஸ்ரீமந் நடன கோபாலநாயகி ஸ்வாமிகள் ப்ருந்தாவன திருக்கோவில், ஸ்ரீ பிரசன்ன வேங்டேசப் பெருமாள் கோவில் மஹாசம்ப்ரோக்ஷணங்களில் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் சேவை செய்தது.

(6) ஸௌராஷ்ட்ர மொழி வகுப்புகள் நடத்துகிறது.

(7) ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் கைங்கர்யம் செய்பவர்களையும், சமுதாயப்பணி ஆற்றியவர்களையும் பாராட்டி கௌரவிக்கிறது.

(8) தமிழ்நாட்டில் ஸௌராஷ்ட்ரர் முழுவரலாறு எனும் நூலை மதுரையில் அறிமுகப்படுத்தியது.

(9) ஸ்ரீமந் நடனகோ பால நாயகி ஸ்வாமிகளின் பக்தர்களை ஒன்று திரட்டும் வண்ணம் மாநிலத்தில் எல்லா பகுதிகளிலும் கிளைகளை அமைத்து வருகிறது.

(10) பிரதி ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை காலையில் தெப்பக்குளத்திலுள்ள நாயகி மந்திரில் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் நடத்தி வருகிறது.

(11) ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகளின் ஆன்மீக, பக்தி பாடல் அடங்கிய ஆடியோ கேசட் வெளியிட்டது.

(12) ஆன்மீக பக்தர்களுக்காக தண்ணீர் பந்தல், ஏழை எளிய மாணவ மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்களை வழங்கி வருகிறது.

எல்லா புகழும் நாயகி ஸ்வாமிக்கே.